# <u>தாம்பரம் பெருநகராட்சி</u>

2018–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30.04.2018ம் நாள் திங்கட்கிழமை ***மாலை.4.00 மணிக்கு*** தாம்பரம் பெரு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
தாம்பரம்.
நாள். 30 .04 .2018

---

## பொருள்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்'2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

**பொருள் எண். 2**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்'2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் மார்ச்'2018ல் பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பற்றிய விவரங்கள் கீழ்கண்டவாறு.

| பதிவு விவரம் | மார்ச்'2018 |
|---|---|
| பிறப்பு (மொத்தம்) | 234 |
| இறப்பு (மொத்தம்) | 91 |
| இறந்து பிறந்தவை | Nil |

**அலுவலக குறிப்பு:**–மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 4**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (Micro Compost Center), பசுமை உரக்குடில் (Onsite Compost), Organic Waste Converter மையங்கள்அமைத்தல் பணிகள் மற்றும் Battery Operated Cart மற்றும் டாடா ஏஸ் (Tipping Model) போன்ற வாகனங்கள் வாங்கிட கீழ்கண்ட பணிகளுக்கு உண்டான மதிப்பீடு தொகைளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மேலும் தூய்மை இந்தியா Swachh Bharath Mission (SBM) 2018–2019 திட்டத்தின் உரிய நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டி விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–05 அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| சிப்பம் எண்.1 | | | |
| 1 | நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (Micro Compost Center) | 7 | 350.00 |
| 2 | பசுமை உரக்குடில் (Onsite Compost) | 20 | 39.60 |
| | மொத்தம்–1 | 27 | 389.60 |
| சிப்பம் எண்.2 | | | |
| 3 | Battery Operated Cart | 17 | 30.00 |
| 4 | TATA ACE (Tipping Model) | 53 | 345.00 |
| | மொத்தம்–2 | **70** | **375.00** |
| | ஆக மொத்தம் (1+2) | **97** | **764.60** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.718/2018/இ1)

பொருள் எண். 5

தாம்பரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ரூ. 160.97 கோடி மதிப்பீட்டில் அரசாணை எண்.(MS). 80 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 28.05.2009ல் ஜவகர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்(JNNURM) கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, இதில் சிப்பம் எண் 1 மற்றும் 2ன் கீழ் முறையே கிழக்கு தாம்பரம் மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளில் கழிவுநீர் குழாய்கள் சுமார் 173.072 கீ.மீ நீளத்தில் கழிவுநீர் குழாய்கள் அமைத்தல், 6744 எண்ணம் கொண்ட ஆள்நுழை வழிகள் அமைத்தல், 33730 பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்குதல் பணிகள், 14எண்ணம் கழிவுநீரேற்று நிலையங்கள் அமைத்தல், 11 எண்ணம் கழிவுநீர் உந்து நிலையகள் மற்றும் 1 எண்ணம் 30 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய பணிகள் முழுமையாக முடிக்கப்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி திட்டப்பணியில் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்கும் பணியில் ஆள்நுழை வாயில்களிலிருந்து குடியிருப்பு வளாக முகப்பு வரையில் மட்டுமே கழிவுநீர் இணைப்பு குழாய்கள் அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திட்டத்தினை ஒரே நேரத்தில் முழுமையாக செயல்படுத்திடும் நோக்கில் முதற்கட்டமாக பாதாள சாக்கடை வீட்டிணைப்பு குடியிருப்பு வளாகம் மற்றும் வணிக வளாகங்களில் உட்பகுதியில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஏற்படுத்தும் பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்ளவும், இதற்கான செலவீனத்தை பொதுமக்களிடமிருந்தே திரும்பபெற ஏதுவாக பாதாள சாக்கடை வைப்புத் தொகை மற்றும் பாதாள சாக்கடை கட்டமைப்பு கட்டணம் ஆகிய கட்டணங்களை சிறப்பு திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாக உரியமையாளர்களிடமிருந்து நகராட்சி மூலம் தவனை முறையில் வசூல் செய்திடவும், இவ்வகை இணைப்பு வழங்குவதால் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதி அமைக்கப்பட்டு முழு சுகாதாரம் பேணிக்காக்கப்படும்.

எனவே மேற்படி திட்டப் பணிகள் முழுமையாக முடிவுற்றவுடன் சோதனை ஓட்டம் பணியில் முதற்கட்டமாக கழிவுநீர் உந்து நிலையங்களை ஒரே நேரத்தில் இயக்குவதற்கு ஏதுவாக இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள 33730 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்புகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும். மேலும் கழிவுநீர் குழாய்கள்,ஆள்நுழை வாயில்கள், வீட்டிணைப்புகள் அமைக்கும் பணிகள் முழுமையாக முடிவுற்ற பகுதிகளில் பணியினை தற்போது துவங்கப்பட வேண்டியுள்ளது.

எனவே இத்திட்டத்தில் உள்ள மொத்தம் 33730 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகளில் (interlink) குடியிருப்பு வளாகங்கள் மற்றும் வணிக வளாகங்களின் உட்பகுதிகளில் பாதாள சாக்கடை இணைப்பு கட்டமைப்பு ஏற்படுத்திடும் பணி மேற்கொள்ள தயாரிக்கப் பட்ட மதிப்பீடு ரூ.32.00 கோடியில் கீழ்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ள பணி மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், அரசு சிறப்பு திட்ட நிதியின் கீழ் மான்யமாகவோ அல்லது கடனாகவோ பெற வேண்டி உரிய நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டி உரிய பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | வார்டு எண் | வீட்டிணைப்பு எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 6572 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.1,1ஏ,2 மற்றும் 3) | 19,20,21 மற்றும் 18(ப) | 6572 | 620.00 |
| 2 | கிழக்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 5535 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.4,6 மற்றும் 6ஏ) | 18(ப),22,23, 24,25,26 மற்றும் 27 | 5535 | 525.00 |
| 3 | கிழக்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 4825 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.5) | 11,12,13,14,15,16,17 மற்றும் 18(ப) | 4825 | 460.00 |
| 4 | மேற்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 6788 எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.7,8,9 மற்றும் 9ஏ) | 28,29,31,32 மற்றும் 33(ப) | 6788 | 640.00 |
| 5 | மேற்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 4158எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.10,10ஏ,11 மற்றும் 11ஏ) | 1,5,6,7,8,9,33(ப), 37(ப), 38 மற்றும் 39 | 4158 | 400.00 |
| 6 | மேற்கு தாம்பரம் பகுதியில் குடியிருப்பு வளாகத்திற்குள் 5852எண்ணம் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வழங்குதல் பணி (மண்டலம் எண்.12,12ஏ மற்றும் 13) | 2,3,4,10,30, 33(ப),34,35, 36 மற்றும் 37 | 5852 | 555.00 |
| | மொத்தம் | | | 3200.00 |

அலுவலக குறிப்பு:– 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.சிறப்பு திட்டமாக கருதி குடியிருப்பு வளாகம் மற்றும் வணிக வளாக உரிமையாளர்களிடமிருந்து பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு கட்டமைப்பு கட்டணம் ஆகிய கட்டணங்களை தவணை முறையில் பெறுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3.மேற்படி திட்ட செலவீனத்தினை அரசு மான்யமாகவோ அல்லது கடனாகவோ/பொது நிதி/ பாதாளசாக்கடை வைப்பு தொகை ஆகிய இனங்களில் நிதி ஆதாரம் பங்கீடு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.6570/2008/இ2)

பொருள் எண். 6

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19ன் கீழ் இந்நகராட்சிப்பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளாலும், குடிநீர் பணிகளாலும் அதிக போக்குவரத்தின் காரணமாகவும் மற்றும் இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் சேதமடைந்த சாலைகளை மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.1000.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட கீழ்க்கண்ட பணி மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், உரிய நிதி ஆதாரம் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை 05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப் படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | வார்டு எண் | சாலை மற்றும் மழைநீர் கால்வாயின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | அம்மன் கோவில் தெரு, பஜனை கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு (வார்டு எண்.1), எம்.இ.எஸ். குறுக்கு தெரு, ஜானகியம்மாள் தெரு, துர்கா நகர் (வார்டு எண். 2), பவுண்டு தெரு (வார்டு எண்.3) ஆகிய தெருக்களுக்கு தார் தளம் அமைக்கும் பணி. எம்.இ.எஸ். தெரு, காமாட்சி நகர் (வார்டு எண்.2) தார் தளம் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 1,2,3 | தார் சாலை – 1.964 கி.மீ<br>பேவர் பிளாக் – 0.700 கி.மீ<br>மழைநீர் வடிகால்வாய் - 1.400 கி.மீ | 157.00 |
| 2 | பாரதமாதா தெருவிற்கு தார் தளம் அமைக்கும் பணி | 11 | தார் சாலை – 0.980 கி.மீ | 170.00 |
| 3 | மாருதி நகர் 1, தச்சுமான்யம் மற்றும் ஐ.ஓ.பி காலனி (வார்டு எண்.20) தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி, யமுனா தெரு விரிவு (வார்டு எண்.27) பகுதிக்கு தார் தளம் அமைக்கும் பணி | 20,27 | தார் சாலை – 0.947 கி.மீ<br>மழைநீர் வடிகால்வாய் – 1.374 கி.மீ | 143.00 |
| 4 | திருவள்ளுவர்புரம் 1வது தெரு, 2வது தெரு, அபிராமி தெரு, பாரதியார் தெரு (வார்டு எண்.29), குறிஞ்சி நகர் பிரதான சாலை (வார்டு எண்.30) டி.என்.எச்.பி முல்லை நகர் 1வது பிரதான சாலை (வார்டு எண்.32) தார் தளம் அமைக்கும் பணி, சி.டி.ஓ காலனி 3வது தெருவிற்கு தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் | 29,30 ,32 | தார் சாலை – 1.567<br>மழைநீர் வடிகால்வாய் - 0.420 கி.மீ | 148.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | | |
| 5 | சி.டி.ஓ காலனி 4வது தெரு, சி.டி.ஓ காலனி 5வது தெரு பகுதிக்கு தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 32 | தார் சாலை – 0.820<br>மழைநீர் வடிகால்வாய் - 0.860 கி.மீ | 185.00 |
| 6 | சர்வீஸ் சாலை முதல் சி.டி.ஓ காலனி 2வது தெருவிற்கு தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 32 | தார் சாலை – 0.400<br>மழைநீர் வடிகால்வாய் - 0.940 கி.மீ | 197.00 |
| | மொத்தம் | | சாலை – 7.378 கி.மீ<br>மழைநீர் வடிகால்வாய்- 4.994கி.மீ | 1000.00 |

அலுவலக குறிப்பு:–1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19ன் கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1000.00 இலட்சத்திற்கான விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை 05 அவர்களுக்கு அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1975/2018/இ1)

பொருள் எண்.7

தாம்பரம் நகராட்சி சென்னைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள பெருநகராட்சி ஆகும். இந்நகராட்சியில் 2017ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 51,333 குடியிருப்புகளும், 4251 வணிக நிறுவனங்களும் அமைந்துள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி ஒவ்வொரு குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், குடிசை பகுதிகள் மற்றும் இதர நிறுவனங்களில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை மற்றும் அபாயகரமான குப்பை என தரம் பிரித்து, குப்பை உருவாகும் இடத்திலேயே பிரித்து சேகரம் செய்வது நகராட்சியின் கடமையாகும். மேற்கண்ட முதல் கட்ட சேகரம் செய்யும் பணிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 446 ஆகும். இந்நகராட்சியில் 244 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது 135 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். எனவே நகரில் உள்ள அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவுகளை தினசரி பிரித்து சேகரம் செய்யும் பணிக்கு 311 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. மேற்கண்ட 311 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.525 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய பிரேரணை அனுப்பி நிர்வாக அனுமதி பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1981/2018/எச்1)

பொருள் எண். 8

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் பொது சுகாதார பிரிவு கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கான சாலை வரி, காப்பீட்டு தொகை செலுத்த வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 1 | TN22 AP 1184 Eicher |
| 2 | TN22 AP 1185 Eicher |
| 3 | TN22 AP 1186 Eicher |
| 4 | TN22 AP 1734 Eicher |
| 5 | TN22 V 9264 TATA 407 |
| 6 | TN22 V 9265 TATA 407 |
| 7 | TN22 V 9266 TATA 407 |
| 8 | TN22 AY 4935 Dumper Placer |
| 9 | TN22 AY 4942 Dumper Placer |
| 10 | TN22 AY 4865 Dumper Placer |
| 11 | TN22 BX 4465 Pal finger |
| 12 | TN22 BX 4457 Compactor |
| 13 | TN22 BX 4372 Compactor |
| 14 | TN22 BU 8718 Dumper Placer |
| 15 | TN22 F 1697 JCB L&T Front End Loader |
| 16 | TN11R 4698 Sullage vehicle |
| 17 | TN11T 0671 Sullage Vehicle |
| 18 | TN11C 5247 Dog Vehicle |
| 19 | TN22E 6584 |

மேற்படி வாகனங்களுக்கு காப்பீடு மற்றும் சாலைவரி செலுத்துவதற்கும், தோராய செலவினம் ரூ.7,20,000/–ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**–அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசியம் கருதி TN22 BX 4465 Pal finger வாகனத்திற்கு காப்பீட்டுத் தொகை செலுத்தியதற்கு மற்றும் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1544/2018/எச்1)

பொருள் எண். 9

இந்நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சி பொது சுகாதார கோட்டங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், மருத்துவ பிரிவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் அனைவருக்கும் 2018–19ம் ஆண்டிற்கு சீருடை வாங்கிடவும்,

தையற்கூலி வழங்கிடவும் ரூ.5.00/—லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1610/2018/எச்1)

**பொருள் எண். 10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் முடிச்சூர் சாலையில் கிருஷ்ணா நகர் தெற்கு பகுதி, வெற்றி நகர் சந்திப்பு, K.R.S.சந்திப்பு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் பகிர்மான PVC குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 லட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண். 11**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார்களை மின்பணிகளை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப் பட்ட தோராய மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண். 12**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.4ல் பாரதியார் தெரு, வடக்கு குளக்கரை தெரு ஆகிய இரண்டு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்பு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண்.13**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் முடிச்சூர் சாலையில் லஷ்மிபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் 250 எம்.எம் விட்டம் கொண்ட DI பைப்பு அமைத்து வால்வுகள் பொருத்தும் பணி மற்றும் வார்டு எண்.33ல் செல்லியம்மன் கோவில் தெரு, வார்டு எண்.35ல் முத்துலிங்கம் தெருவில் பழுதடைந்த PVC குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு

ரூ.4.50 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ2)

பொருள் எண்.14

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், செங்கல்பட்டு மண்டல அலுவலகத்திற்கு தேவையான இருக்கைகள், LED விளக்குகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ2)

பொருள் எண்.15

இந்நகராட்சி பழைய பேருந்து நிலையம் அம்பேத்கார் சிலை அருகில் உள்ள நகராட்சி பங்க் எண்.3ன் குத்தகை உரிமம் எண்.2007131ஐ 01.04.2018 முதல் குத்தகை உரிமம் புதுப்பிக்கபட வேண்டும். இந்நிலையில் அவ்விடத்தில் பல அடுக்கு வாகன நிறுத்தம் (Multi level Car parking) அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளதாலும், அதன் அருகே தானியங்கி நடைபாதை (Escalator) நெடுஞ்சாலை துறையின் மூலம் அமைக்கப்பட உள்ளதாலும், மேற்படி பகுதியில் உள்ள நகராட்சி பங்கினை இடித்து அப்புறப்படுத்த நகரமன்ற தீர்மான எண்.2390, நாள்.28.03.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி பங்க் எண்.3ன் குத்தகைதாரர் திரு.V.R.P.வேல் மயில் என்பவர் தன் தந்தை V.R.பாண்டியன் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் குடும்பம் இக்கடையின் வருவாயை நம்பியே உள்ளதாலும், தங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நகராட்சி மாற்று இடம் வழங்க கோரியுள்ளார்.

எனவே மனுதாரருக்கு தற்சமயம் இந்த கட்டிடத்தினை இடித்து விட்டு பங்க் ஸ்டீல் இரும்பினால் மாற்று இடத்தில் தற்காலிகமாக அதே வாடகையில் அதே இடத்தின் தெற்கு பகுதியில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடம் அருகில் அமைத்து கொள்ள அனுமதி வழங்கவும், நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேலும், நகராட்சி பங்க் எண்.3ன் குத்தகை உரிமம் எண்.2007131ன் வாடகையினை தொடர்ச்சியாக புதுப்பிக்கவும், மேலும் நகராட்சிக்கு தேவைப்படும் பொழுது அங்கிருந்து இரும்பு பெட்டியினை அகற்றி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இரும்பு பெட்டியின் அளவு 8'X5' என்ற அளவில் தற்காலிகமாக அமைத்துக் கொள்ள மட்டும் அனுமதி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், முடிவுற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சிக்கு தேவைப்படும் பொழுது அங்கிருந்து இரும்பு பெட்டியினை அகற்றி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இரும்பு பெட்டியின் அளவு 8’x5’ என்ற அளவில் தற்காலிகமாக அமைத்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1217/2018/அ1)

**பொருள் எண்.16**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள 20 எண்ணம் சிறுமின்விசை பம்பு ஆழ்துளைகள் 20 எண்ணம் கைப்பிடி ஆழ்துளை கிணறுகளை சுத்தம் (Flushing) செய்திட பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண்.17**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.24ல் வடக்கு தெரு மற்றும் எஸ்.எஸ்.பிள்ளை தெருவிற்கு கைப்பிடி பம்பு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண்.18**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.33 மற்றும் வார்டு எண்.37ல் இணைக்கின்ற சந்திப்பில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள வைகை நகர் குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**—மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்124/2018/இ1)

பொருள் எண்.19

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.21ல் ரங்கநாதன் நகர் 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**–மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்124/2018/இ1)

பொருள் எண்.20

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.31ல் தெற்கு தெரு ராமகிருஷ்ணா பள்ளி அருகில் சிறுபாலம் அமைத்து இடதுபுறம் தெற்கு பகுதியில் உள்ள குறுக்கு தெருவிற்கு (மாதவ ரெட்டி தெரு) மழைநீர் வடிகால்வாய் பழுது பார்த்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**–மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்124/2018/இ1)

பொருள் எண்.21

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.19ல் கணேஷ் நகர் பூங்கா அருகாமையில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை உயர்த்தி ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல், பக்கவாட்டு பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல், சுற்றுச்சுவருக்கு வண்ணப்பூச்சு பணி, விளக்கு வசதி மற்றும் நடைபாதைகள் அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.14.50 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 124 /2018/இ1)

பொருள் எண்.22

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாநில பேரிடர் மேலாண்மை திட்ட நிதியின் (2017) கீழ் கிழக்கு தாம்பரம் வார்டு எண்.24ல் எம்.இ.எஸ். சாலையில் பார்த்திமா சர்ச் முதல் BSNL அலுவலக வரை தார் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2414 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.E. வெங்கடேசன் | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.K. கிருஷ்ணமூர்த்தி | (+) 0.72% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.E.வெங்கடேசன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண். 718/2018/இ1)

பொருள் எண்.23

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.15ல் காந்தி பூங்கா, வார்டு எண்.18ல் திருப்பூர் குமரன் பூங்கா, வார்டு எண்.20ல் பாரதி பூங்கா, வார்டு எண்.22ல் சுப்பராயன் பூங்கா மற்றும் வார்டு எண்.27ல் அருள் நகர் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் உருவாகும் கழிவுகளை கொண்டு தனித்தனியாக பசுமைக் உரக்குடில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண். 2446 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.P. திருநாவுக்கரசு | (–) 0.01% | குறைவு |
| 2 | திரு.S.சோமசுந்தரம் | (+) 0.71% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.P.திருநாவுக்கரசு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண்.718/2018/இ1)

பொருள் எண்.24

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 32ல் சிடிஓ காலனி சந்திரபுரி,வார்டு எண். 35ல் முத்துரங்கம் பூங்கா வார்டு

எண். 2ல் காமாட்சி நகர் பூங்கா, வார்டு எண்.1ல் பர்மா காலனி பூங்கா, மற்றும் வார்டு எண்.38ல் TNHB முல்லை நகர் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் உருவாகும் கழிவுகளை கொண்டு தனித்தனியாக பசுமை உரக்குடில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2446 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.R. சுந்தரம் | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.D. மகேஷ் | (+) 0.45% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.R.சுந்தரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண்.718/2018/இ1)

பொருள் எண்.25

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.37ல் திருநீர்மலை சாலை சுடுகாடு, வார்டு எண்.30ல் கல்யாண் நகர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி, வார்டு எண்.2ல் அமர் நகர் பகுதி, வார்டு எண். 32. சாய் நகர் பம்பு அவுஸ் அருகில் மற்றும் வார்டு எண். 32ல் ஜெருசலம் நகர் டேவிட் தெரு ஆகிய இடங்களில் உருவாகும் கழிவுகளை கொண்டு தனித்தனியாக பசுமை உரக்குடில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2446 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப் படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.K. ரமேஷ் பாபு | (–) 0.01% | குறைவு |
| 2 | மெசர்ஸ்.பிளசிங் கன்ஸ்ட்ரக்ஷன் | (+) 0.85% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.K. ரமேஷ் பாபு என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 718/2018/இ1)

பொருள் எண்.26

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாநில பேரிடர் மேலாண்மை திட்ட நிதியின் (2017) கீழ் கிழக்கு தாம்பரம் வார்டு எண்.24ல் எம்.இ.எஸ். சாலையில் BSNL அலுவலக முதல் Airforce Gate வரை தார் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2414 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.E. வெங்கடேசன் | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.K. கிருஷ்ணமூர்த்தி | (+) 1.10% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: – 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.E.வெங்கடேசன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண். 718/2018/இ1)

பொருள் எண்.27

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாநில பேரிடர் மேலாண்மை திட்ட நிதியின் (2017) கீழ் கிழக்கு தாம்பரம் வார்டு எண்.18ல் ஈஸ்வரி நகர் குறுக்கு தெருக்களுக்கு தார் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண். 2414 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.E. வெங்கடேசன் | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.K. கிருஷ்ணமூர்த்தி | (+) 1.44% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: – 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.E.வெங்கடேசன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண். 718/2018/இ1)

பொருள் எண்.28

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மாநில பேரிடர் மேலாண்மை திட்ட நிதியின் (2017) கீழ் கிழக்கு தாம்பரம் வார்டு எண்.19ல் ஸ்ரீராம் நகர் மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார் சாலை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்துக்கு நகரமன்ற எண்.2414 நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 18.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.K.கிருஷ்ணமூர்த்தி | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.J.சம்பத்குமார் | (+) 0.55% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.K. கிருஷ்ணமூர்த்தி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண். 718/2018/இ1)

பொருள் எண்.29

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 33, 38 பூர்ண திலகம் பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் கால்வாய் உயர்த்தி மூடுபலகை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2238 நாள்.31.01.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 28.02.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு

நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.K.சதீஷ்குமார் | (–) 0.32% | குறைவு |
| 2 | திரு.R. விஜயராகவன் | 0.25% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.K.சதீஷ்குமார் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண்.30

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 39 வரை உள்ள வார்டுகளில் ஒரே கட்டிடத்திற்கு தவறுதலாக இருமுறை சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்க முடியாமல் இரட்டை வரிவிதிப்பாக கேட்பு பதிவேட்டில் கீழ்கண்டவாறு நிலுவையாக உள்ளது.

| ஒரே கட்டிடத்திற்கு இரட்டை பதிவாக உள்ள சொத்துவரி விதிப்பு எண்களும் அதற்கான கேட்பு தொகையும் நீக்கம் செய்யப்பட வேண்டிய விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எ ண் | வருவாய் உதவியாளர் பெயர் | வார்டு எண் | நிலுவை வருடம் 2010–11 I முதல் 2016–17 II வரை | நடப்பு வருடம் 2017–18 I முதல் 2017–18 II வரை | மொத்தம் ரூ |
| 1 | ஆ. சார்லஸ் | 28,34 | 33,317 | 7,056 | 40,373 |
| 2 | எஸ . நரேந்திரன் | 11,12,13, 14,15 | 35,674 | 11,818 | 47,492 |
| 3 | அ. ஜனார்த்தனன் | 1,39 | 54,819 | 11,802 | 66,621 |
| | மொத்தம் | | 1,23,810 | 30,676 | 1,54,486 |

மேற்கண்ட ஒரே கட்டிடத்திற்கான இரட்டை வரிவிதிப்புகளில் ஒன்றை மட்டும் நீக்கம் செய்யவேண்டியுள்ளதால், மேற்கண்டவாறு வருவாய் உதவியாளர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளில் நிலுவையாக வரும் இரட்டை வரிவிதிப்புகளில், ஒன்றினை மட்டும் நீக்கம் செய்யவும் அதற்குண்டான கேட்பு தொகை ரூ.1,54,486/–ஐ நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு:**– நிர்வாக நலன் கருதி கேட்பு பட்டியலில் வரும் வரிவிதிப்புகளையும், அதற்கான கேட்பு தொகையை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்.389/2017/அ1)

பொருள் எண்.31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 39 வரை உள்ள வார்டுகளில் பழைய கட்டிடங்களுக்கு புதியதாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட பிறகும், பழைய கட்டிடங்களுக்கு ஏற்கனவே வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் கீழ்கண்டவாறு தொடர்ந்து கேட்பு பதிவேட்டில் நிலுவையாக உள்ளது.

| பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு, புதிய கட்டிடங்கள் கட்டி வரிவிதிப்பு செய்யப்பட்டபோது, பழைய வரியினை நீக்கம் செய்யாமல் அதற்கான கேட்பு தொகை தொடர்ந்து நிலுவையில் உள்ளதால், அதனை நீக்கம் செய்யப்படவேண்டிய விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | வருவாய் உதவியாளர் பெயர் | வார்டு எண் | நிலுவை வருடம் 2002-03 I **முதல்** 2016-17 II **வரை** | நடப்பு வருடம் 2017-18 I **முதல்** 2017-18 II **வரை** | மொத்தம் ரூ |
| 1 | ஆ. சார்லஸ் | 28,34 | 26,700 | 24,598 | 51,298 |
| 2 | எஸ . நரேந்திரன் | 11,12,13,14,15 | 3,19,130 | 52,064 | 3,71,194 |
| 3 | அ. ஜனார்த்தனன் | 1, 39 | 21,883 | 3,028 | 24,911 |
| | **மொத்தம்** | | 3,67,713 | 79,690 | 4,47,403 |

மேற்கண்டவாறு பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டி வரிவிதிப்பு செய்யப்படும் போது, பழைய கட்டிடத்திற்கான வரிவிதிப்பினை நீக்கம் செய்யாமல் விட்டதால் ஏற்படும் கேட்பு தொகையினை தொடர்ந்து வருவதனை நீக்கம் செய்யப்பட வேண்டும். அவற்றினை நீக்கம் செய்வதற்கு மேலே வருவாய் உதவியாளர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளில் நிலுவையாக வரும் வரிவிதிப்புகளையும் அதற்குண்டான கேட்பு தொகை ரூ.4,47,403/—ஐ நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு:**—நிர்வாக நலன் கருதி கேட்பு பட்டியலில் வரும் வரிவிதிப்புகளையும், அதற்கான கேட்பு தொகையை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 389/2017/அ1)

பொருள் எண்.32

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10,11,12,13,14,15, 24,28,29,34,35 ஆகிய வார்டுகளில சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் நில எடுப்பு தேசிய நெடுஞ்சாலைகள் திட்டங்கள் காஞ்சிபுரம் அவர்களின்

கடித ந.க.எண்.177/2007/தே.நெ.45 நாள்.07.08.2009 மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.62756/2006/எப்3. நாள்.24.03.2010 ன்படி ஜி.எஸ்.டி சாலை, வேளச்சேரி ரோடு, முடிச்சூர் ரோடு, பாரத மாதா தெரு ஆகியவைகளில் சாலை விரிவாக்கம் செய்யப்பட்டபோது, மேற்படி இடங்களில் உள்ள குடியிருப்புகள், வணிகக்கட்டிடங்கள், கடைகள் அப்புறப்படுத்தப் பட்டதால் அவற்றிற்குண்டான சொத்துவரி விதிப்புகள் கேட்பு பதிவேட்டில் நீக்கம் செய்யப்படாமல் கீழ்கண்டவாறு தொடர்ந்து நிலுவையில் உள்ளது.

மாநில நெடுஞ்சாலை நான்கு வழி பாதை விரிவாக்கம் செய்யப்பட்டதில் கட்டிடம் அகற்றப்பட்டுவிட்டாதால், கட்டிடஙகள் இல்லாததற்கு வரிவிதிப்புகள் அதற்கான கேட்பு தொகைகளை நீக்கம் செய்யப்பட வேண்டிய விபரம்

| வ. எ ண் | வருவாய் உதவியாளர் பெயர் | வார்டு எண் | நிலுவை வருடம் 2004-05 II முதல் 2016-17 II வரை | நடப்பு வருடம் 2017-18 I முதல் 2017-18 II வரை | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ஜா.பாபு | 10,35 | 2,28,144 | 32,592 | 2,60,736 |
| 2 | ஆ. சார்லஸ் | 28,29,34 | 2,19,216 | 52,916 | 2,72,132 |
| 3 | எஸ். நரேந்திரன் | 11,12,13,14,15 | 1,17,368 | 58,684 | 1,76,052 |
| 4 | எம். பழனி | 24 | 61,338 | 11,534 | 72,872 |
| | **மொத்தம்** | | **6,26,066** | **1,55,726** | **7,81,792** |

மேற்கண்ட வரிவிதிப்புகளை கட்டிடங்கள் அகற்றப்பட்டவுடன் கேட்புப் பட்டியலில் இருந்து உடன் நீக்கம் செய்யவேண்டும். அவ்வாறு நீக்கம் செய்யப்படாததால் உருவான கேட்புகள் (Demand) அனைத்தையும் கணினி கேட்புப்பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படவேண்டும். அதற்கு மேற்கண்டவாறு வருவாய் உதவியாளர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வார்டுகளில் நிலுவையாக வரும் வரிவிதிப்புகளையும் அதற்குண்டான கேட்புப் பட்டியலில் இருந்து தொகை ரூ.7,81,792/—ஐ பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன றத்தின அனுமதிக்கு பொருள வைக்கப்படுகிறது. (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**அலுவலக குறிப்பு:—** நிர்வாக நலன் கருதி கேட்பு பட்டியலில் வரும் தவறான கேட்பு வரிவிதிப்புகளையும், அதற்கான கேட்பு தொகையையும் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 389/2017/அ1)

பொருள் எண்.33

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் 02.04.2018ம் தேதி ஆய்வு கூட்ட அறிவுரையின்

பேரில் திருவிடந்தையில் நடைபெற உள்ள இராணுவ கண்காட்சி முகாம் 2018க்கு தாம்பரம் நகராட்சி சார்பாக திடக்கழிவு பணிகள் மேற் கொள்ளுவதற்கு ஏதுவாக 25 காம்பக்டர் பின்கள் வாங்குவதற்கு தனி அலுவலரின் 02.04.2018ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 09.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்

| வ. எண. | ஒப்பந்ததாரரின் பெயர் | காம்பக்டர் பின் ஒன்றின் விலை | GST | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | VAMBSK FABS<br>K.K. புதூர் ரோடு,<br>கோவில்மேடு கிழக்கு<br>வேலாண்டிபாளையம்<br>போஸ்ட்,கோயம்புத்தூர் | 26700 | 4770 | 31270 |
| 2 | ARV Body Builders<br>97, டாங்க் ரோடு,<br>பூந்தமல்லி,சென்னை–56 | 28000 | 5040 | 33040 |
| 3 | சக்திபாடி ஓர்க்ஸ்<br>46, பூந்தமல்லி Byepass ரோடு, பூந்தமல்லி,<br>சென்னை–56 | 25000 | 4500 | 29500 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளியாக சக்தி பாடி ஓர்க்ஸ், பூந்தமல்லி என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று அன்னார்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) இராணுவ கண்காட்சி முகாம் 2018 ன் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1505/2018/எச்1)

பொருள் எண்.34

தாம்பரம் நகராட்சி பொது சுகாதாரம் மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தாமபரம் இருப்பு ஆகியோரின் அறிவுரையின் பேரில் காஞ்சிபுரம் மாவட்டம் திருவிடந்தையில் நடைபெற உள்ள இராணுவ கண்காட்சி முகாம் 2018க்கு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள 30 எண்ணிக்கை தனி சக்கர பின்கள் (110 ltrs) வாங்க தனி அலுவலரின் 02.04.2018ம் தேதிய முன அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதில் 09.04.2018ல் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| 1) | Window Scape<br>33/2, முகாதல் தெரு,<br>புரசைவாக்கம்,<br>சென்னை–7 | ரூ.4250/–<br>(excluding GST & Transport+ charges per/Bin |
| 2) | SAFE PLASTICS<br>90, பெருமாள் கோவில் தெரு,<br>‘A’ Block, பள்ளிக்குப்பம் கிராமம்,<br>விளாங்காடு குப்பம்,<br>ரெட்ஹில்ஸ், சென்னை–52 | ரூ.3910/–<br>(excluding GST & Transport+charges per/Bin |
| 3) | KMS PLAST WORLD PVT LTD,<br>“Metro Tower”<br>115, EVR Periyar Salai,<br>Chennai-84 | ரூ.4015/–<br>(excluding GST & Transport+charges per/Bin |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளியாக SAFE PLASTICS, ரெட் ஹில்ஸ், சென்னை–52 என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று அன்னாரக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) இராணுவ கண்காட்சி முகாம் 2018ன் பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1505/2018/எச்1)

பொருள் எண்.35

பொது சுகாதார பிரிவு தாம்பரம் நகராட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.02.04.2018ன் படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் தாம்பரம் அவர்களின் நேரடி அறிவுரையின் படியும், காஞ்சிபுரம் மாவட்டம் திருவிடந்தையில் 11.04.2018 முதல் 14.04.2018 வரை நடைபெற உள்ள

இராணுவ கண்காட்சி முகாமில் தாம்பரம் நகராட்சி சார்பாக திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள 25 காம்பக்டர் பின்கள் (1100 லிட்டர் கொள்ளளவு) மற்றும் 30 தனி சக்கர பின்கள் (Wheel Barrow bins 110 ltrs) பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

தாம்பரம் நகராட்சியின் காம்பக்டர் பின்கள் மிகவும் பழுதடைந்து உபயோகம் இல்லாத நிலையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி புதிய காம்பக்டர் பின்கள் 25 (1100 லிட்டர்) எண்ணிக்கையும் தனி சக்கர பின்கள் (Wheel Barrow bins 110 ltrs) -30 எண்ணிக்கையும் வாங்கி கொள்ள ஒப்பந்தப்புள்ளி/விலைப்புள்ளி கோரிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி/ விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1505/2018/எச்1)

**பொருள் எண்.36**

அரசு ஆணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)நாள் .03.7.2007ல் , நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் , குத்தகையை புதுப்பித்தல் குறித்து வெளியிடப்பட்ட திருத்திய நடைமுறை ஆணையில், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப் பட்ட குத்தகை வீதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக் கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லையானால், அச் சொத்து பொது ஏலத்தின மூலம் குத்தகைக்கு விட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைபடி, இந்நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடையும் சண்முகம், பர்மா கடைகள –10, முத்துரங்கம் தெருவில் உள்ள கடைகள , அப்துல ரசாக் தெருவில் உள்ள கடைகள் சாலை வணிக வளாக தரைதளம் கடைகள் /ஜீவா வணிக வளாகம் கடைகள் / துரைசாமி மார்க்கெட் கடைகள் குத்தகை காலம் 31.3.2018ல் முடிவடைவதால், மேற்படி கடைகளுக்கு பொதுப்பணித்துறையின் விலை விகிதம்/ சந்தை மதிப்பின் அடிப்படையில் நகராட்சி பொறியாளர் அவர்களால் மாத வாடகை நிர்ணயம் செய து வழங்கப்பட்டுள்ள பட்டியலைக் கொண்டு பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையிலான கண்காணிப்பு குழுவின் அனுமதிக்கு 19.03.2018ல் அனுப்பி வைக்கப்பட்டது.

| வ. எண். | வ. எண். | குத்தகைதாரர் பெயர் | கடை எண். | வரிவிதிப்பு எண். | முந்தைய மாத வாடகை தொகை | கண்காணிப்பு குழுவால் 01.4.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| | | **BURMA 10-SHOPS** | | | | |
| 1 | 1 | Muthu nadar | 1 | **2007027** | 896 | 3350 |
| 2 | 2 | M.Chandrasekaran | 2 | **2007028** | 896 | 3350 |
| 3 | 3 | A.Poongavanam | 3 | **2007029** | 896 | 3350 |
| 4 | 4 | K. Alamelu | 4 | **2007030** | 896 | 3350 |
| 5 | 5 | K. Sethuraman | 5 | **2007031** | 896 | 3350 |
| 6 | 6 | M.Selva Kumara | 6 | **2007032** | 896 | 3350 |
| 7 | 7 | A.Rajapandian | 7 | **2007033** | 896 | 3350 |
| 8 | 8 | S.Kantharopeeammal | 8 | **2007034** | 896 | 3350 |
| 9 | 9 | S.Raja Isac | 9 | **2007035** | 896 | 3350 |
| 10 | 10 | Rajasekaran | 10 | **2007036** | 896 | 3350 |
| | **MUTHULINGAM STREET 5 SHOPS** | | | | **8960** | **33500.00** |
| 11 | 1 | M.S.Gurusamy | 1 | **2007037** | 2126 | 4700 |
| 12 | 2 | Kuppusamy | 2 | **2007038** | 2126 | 4700 |
| 13 | 3 | V.Duraisamy | 3 | **2007039** | 2267 | 4700 |
| 14 | 4 | J.Rajaram | 4 | **2007040** | 2267 | 4700 |
| 15 | 5 | V.Nagarajan | 5 | **2007041** | 2267 | 4700 |
| | **DURAISAMY MARKET 26 SHOPS** | | | | **11053** | **23500.00** |
| 16 | 1 | K.Jayapandian | 1 | **2007001** | 1714 | 5950 |
| 17 | 2 | L.Chandrakumar | 2 | **2007002** | 1630 | 5950 |
| 18 | 3 | A.R.Lingadurai | 3 | **2007003** | 1623 | 5950 |
| 19 | 4 | A.Jayaraj | 4 | **2007004** | 1942 | 6850 |
| 20 | 5 | Dharmaraj | 5 | **2007005** | 1991 | 6850 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | 6 | T.Dhanalakshmi | 6 | **2007006** | 1991 | 6850 |
| 22 | 7 | A.R.Thirumanee | 7 | **2007007** | 1991 | 6850 |
| 23 | 8 | A. Thajinisha | 8 | **2007008** | 1898 | 6850 |
| 24 | 9 | Abdulkapoor | 9 | **2007009** | 1971 | 5850 |
| 25 | 10 | Munusamy | 10 | **2007010** | 1971 | 5850 |
| 26 | 11 | Shanurutheen | 11 | **2007011** | 1826 | 6850 |
| 27 | 12 | A.M.Mothershakeepu | 12 | **2007012** | 2203 | 6950 |
| 28 | 13 | N.Natesan | 13 | **2007013** | 2203 | 6850 |
| 29 | 14 | A.R.Kovilpillai | 14 | **2007014** | 2203 | 4800 |
| 30 | 15 | S.Sulaiman | 15 | **2007015** | 2203 | 4800 |
| 31 | 16 | Vijailakshmi | 16 | **2007016** | 2203 | 4550 |
| 32 | 17 | Mugamathu Isac | 17 | **2007017** | 2203 | 4550 |
| 33 | 18 | Nasuka | 18 | **2007018** | 2301 | 5000 |
| 34 | 19 | Mohamed anwarkhan | 19 | **2007019** | 1600 | 5000 |
| 35 | 20 | A. Arulkennady | 20 | **2007020** | 1995 | 5450 |
| 36 | 21 | S. Raja | 21 | **2007021** | 1862 | 4100 |
| 37 | 22 | C.Ganeshan | 22 | **2007022** | 2192 | 4700 |
| 38 | 23 | Gajini | 23 | **2007023** | 2118 | 4500 |
| 39 | 24 | V. Raman | 24 | **2007024** | 2277 | 5500 |
| 40 | 25 | M. Senthilvel | 25 | **2007025** | 1837 | 4950 |
| 41 | 26 | C.SubbaiyaNadar | 26 | **2007026** | 1837 | 5450 |
| | **ABDULRAZAK STREET 7 STEEL BUNKS** | | | | **61001** | **148000.00** |
| 42 | 1 | Mohan | 1 | **2007144** | 382 | 3000 |
| 43 | 2 | A.Velayutham | 2 | **2007145** | 320 | 3450 |
| 44 | 3 | Muthu | 3 | **2007146** | 320 | 2500 |
| 45 | 4 | N. Sundarrajan | 4 | **2007147** | 320 | 2500 |
| 46 | 5 | Arputham | 5 | **2007148** | 291 | 2500 |
| 47 | 6 | Thangavelu | 6 | **2007149** | 584 | 2500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 48 | 7 | Varadhan | 7 | **2007150** | 2298 | 2500 |
| | **SHANMUGAM ROAD 17 SHOPS ( GROUND FLOOR)** | | | | **4515** | **18950.00** |
| 49 | 1 | M.Kuthoos Kani | 1 | **2007050** | 1971 | 11050 |
| 50 | 2 | M.Kuthoos Kani | 2 | **2007051** | 2061 | 11050 |
| 51 | 3 | D. Ahilan | 3 | **2007052** | 3498 | 9100 |
| 52 | 4 | M.Arabiya Begam | 4 | **2007053** | 3498 | 9100 |
| 53 | 5 | Raj Medicals | 5 | **2007054** | 3498 | 9100 |
| 54 | 6 | Munusamy | 6 | **2007055** | 3498 | 9100 |
| 55 | 7 | E.p.Radhakrishnan | 7 | **2007056** | 3498 | 9100 |
| 56 | 8 | R.S.shankar | 8 | **2007057** | 3498 | 9100 |
| 57 | 9 | S.D.Dhaga | 9 | **2007058** | 3498 | 9950 |
| 58 | 10 | K.Manickam | 10 | **2007059** | 3498 | 9950 |
| 59 | 11 | A. Jagangir | 11 | **2007060** | 3498 | 9950 |
| 60 | 12 | Grama Nala Village Social Saraswathy Nidhi | 12 | **2007061** | 3498 | 10350 |
| 61 | 13 | Chennai Sarvathya Sangam | 13 | **2007062** | 3498 | 10350 |
| 62 | 14 | Tamilnadu Cuivil Supply | 14 | **2007063** | 3498 | 10350 |
| 63 | 15 | Tamilnadu Cuivil Supply | 15 | **2007064** | 3498 | 10350 |
| 64 | 16 | Tamilnadu Cuivil Supply | 16 | **2007065** | 3498 | 10350 |
| 65 | 17 | A. Ayubkhan | 17 | **2007066** | 3498 | 10350 |
| | **SHANMUGAM ROAD 11 SHOPS (GROUND FLOOR)** | | | | **56502** | **168650.00** |
| 66 | 1 | Co-optex | 1 | **2007067** | 3079 | 10100 |
| 67 | 2 | Co-optex | 2 | **2007068** | 3079 | 10100 |
| 68 | 3 | Co-optex | 3 | **2007069** | 3079 | 10100 |
| 69 | 4 | H.Vasanthakumar | 4 | **2007070** | 3219 | 7800 |
| 70 | 5 | H.Vasanthakumar | 5 | **2007071** | 3219 | 7800 |
| 71 | 6 | P.Satendra Kumar | 6 | **2007072** | 3079 | 7800 |
| 72 | 7 | C.A.Babu | 7 | **2007073** | 3079 | 7800 |
| 73 | 8 | Sathya Samuvel | 8 | **2007074** | 3079 | 7800 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 74 | 9 | M.Rajagopal | 9 | **2007075** | 3281 | 7800 |
| 75 | 10 | A.Ramalingam | 10 | **2007076** | 3079 | 7800 |
| 76 | 11 | Dhanalakshmi rajan | 11 | **2007077** | 3079 | 7800 |
| | **DURAISAMY MARKET MUTTON STALLS – 15** | | | | **34351** | **92700.00** |
| 77 | 1 | R. Sumanbala | 1 | **2007151** | 3422 | 3950 |
| 78 | 2 | Mamtharahim | 3 | **2007152** | 2054 | 3950 |
| 79 | 3 | Kathika Shek | 4 | **2007153** | 2099 | 3950 |
| 80 | 4 | Ramesh | 7 | **2007154** | 2712 | 3950 |
| 81 | 5 | Kothandam | 8 | **2007155** | 2844 | 3950 |
| 82 | 6 | R. Suman Bala | 2 | **2007156** | 2203 | 3950 |
| 83 | 7 | S.M. Joseph | 5 | **2007157** | 2169 | 3950 |
| 84 | 8 | R. S. Manohar | 6 | **2007158** | 728 | 3950 |
| 85 | 9 | S. Subbulakshmi | 14 | **2007159** | 728 | 3950 |
| 86 | 10 | P.S.A.Manohar | 11 | **2007160** | 633 | 3950 |
| 87 | 11 | S. Subbulakshmi | 15 | **2007161** | 837 | 3950 |
| 88 | 12 | T. Muthu | 10 | **2007162** | 837 | 3950 |
| 89 | 13 | G.Revathi | 9 | **2007163** | 837 | 3950 |
| 90 | 14 | K.Jayaraman | 13 | **2007164** | 633 | 3950 |
| 91 | 15 | V.Jahir Husain | 12 | **2007165** | 690 | 3950 |
| | **SHANMUGAM ROAD BIG SHOP** | | | | **23426** | **59250.00** |
| 92 | 1 | A. Thanga Durai | 1 | **2007078** | 6997 | **36550** |
| | **SHANMUGAM ROAD 22-SHOP (GROUND FLOOR)** | | | | **6997** | **36550** |
| 93 | 1 | Ashokan | 1 | **2007079** | 2073 | 3100 |
| 94 | 2 | L. Kumaresan | 2 | **2007080** | 10459 | 12050 |
| 95 | 3 | KanchepuramDist.Co-opCil Sup. | 3 | **2007081** | 800 | 7310 |
| 96 | 4 | KanchepuramDist.Co-opCil Sup. | 4 | **2007082** | 800 | 7310 |
| 97 | 5 | H.Venkatesan | 5 | **2007083** | 9604 | 11050 |
| 98 | 6 | Rukmanidevi | 6 | **2007084** | 10158 | 11700 |
| 99 | 7 | K.Jayaraman | 7 | **2007085** | 10110 | 11700 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 100 | 8 | S.S. Zubalrali | 8 | **2007086** | 10643 | 12300 |
| 101 | 9 | Unique Auto | 9 | **2007087** | 10242 | 11800 |
| 102 | 10 | Unique Auto | 10 | **2007088** | 10403 | 12000 |
| 103 | 11 | T.Munusamy | 11 | **2007089** | 11168 | 12900 |
| | **SHANMUGAM ROAD 22-SHOP ( 1ST FLOOR )** | | | | **86460** | **113220.00** |
| 104 | 12 | M.Venkatesan | 12 | **2007090** | 761 | 3100 |
| 105 | 13 | M.Venkatesan | 13 | **2007091** | 1977 | 7250 |
| 106 | 14 | M. Kasthuri | 14 | **2007092** | 1521 | 7250 |
| 107 | 15 | V. Geetha | 15 | **2007093** | 3992 | 7250 |
| 108 | 16 | M.Venkatesan | 16 | **2007094** | 2450 | 7250 |
| 109 | 17 | P. Maheswari | 17 | **2007095** | 3089 | 7250 |
| 110 | 18 | K.Jayaraman | 18 | **2007096** | 5130 | 7250 |
| 111 | 19 | K.Ravichandran | 19 | **2007097** | 4840 | 7250 |
| 112 | 20 | S. Balu | 20 | **2007098** | 2890 | 7250 |
| 113 | 21 | Arumai Doss | 21 | **2007099** | 4286 | 7250 |
| 114 | 22 | James | 22 | **2007100** | 4072 | 7250 |
| | **JEEVA COMPLEX 26 SHOPS** | | | | **35008** | **75600.00** |
| 115 | 1 | Sayath Allam | 1 | **2007101** | 1052 | 1300 |
| 116 | 2 | K.Dhanalakshmi | 2 | **2007102** | 1470 | 1600 |
| 117 | 3 | M.Senthilmathi | 3 | **2007103** | 3148 | 4150 |
| 118 | 4 | S. Suresh | 4 | **2007328** | 3441 | 4350 |
| 119 | 5 | S.P. Paneer Selvam<br>S.P.MuthuKumar | 5 | **2007105** | 4046 | 5000 |
| 120 | 6 | R.G.Gowsalya | 6 | **2007106** | 2396 | 6650 |
| 121 | 7 | R.Gopalakrishnan | 6A | **2007107** | 2396 | 6650 |
| 122 | 8 | M.S. Baranidharan | 7 | **2007108** | 4617 | 5310 |
| 123 | 9 | S. Janibasha | 8 | **2007109** | 3022 | 4600 |
| 124 | 10 | A.R. Syed Hakkim Raja | 9 | **2007110** | 2267 | 3200 |
| 125 | 11 | Suariya Beevi | 10 | **2007111** | 4701 | 5800 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 126 | 12 | C.Jaganathan | 11 | **2007112** | 4701 | 5800 |
| 127 | 13 | B. Devaraj | 12 | **2007113** | 2519 | 3200 |
| 128 | 14 | S.Balakrishnan | 13 | **2007114** | 1910 | 4650 |
| 129 | 15 | K.N.Abdul pari | 14 | **2007115** | 4323 | 6900 |
| 130 | 16 | A.J.Kamaludin | 15 | **2007116** | 4408 | 5100 |
| 131 | 17 | P.M.Ravikumar | 16 | **2007117** | 3694 | 5100 |
| 132 | 18 | S.K.Rahamathulla | 17 | **2007118** | 2507 | 3800 |
| 133 | 19 | S. Abubakkar | 18 | **2007119** | 841 | 2200 |
| 134 | 20 | T. Pandiya Rajan | 19 | **2007120** | 734 | 910 |
| 135 | 21 | S.M.Haza | 20 | **2007121** | 1052 | 1210 |
| 136 | 22 | S.M.Abdul kathar | 21 | **2007122** | 840 | 1150 |
| 137 | 23 | P.Mudhaiyan | 22 | **2007123** | 1339 | 1810 |
| 138 | 24 | Saroja Gajendran | 23 | **2007124** | 2183 | 2510 |
| 139 | 25 | Subramani | 24 | **2007125** | 1060 | 1450 |
| 140 | 26 | S. Kuthoos | 25 | **2007126** | 1006 | 1600 |
| | **TELEPHONE BOOTHS - 7** | | | | **65673** | **96000.00** |
| 141 | 1 | S. Poongavana (Near Philips Hospital) | 1 | **2007136** | 91 | 1100 |
| 142 | 2 | V. Kothandaraman ( Nr.Kakkan Street) | 4 | **2007139** | 91 | 1150 |
| 143 | 3 | Banumathy (Near Muthuramgam St.) | 5 | **2007140** | 229 | 1250 |
| 144 | 4 | Kokila (Near Baby Shool) | 3 | **2007138** | 199 | தற்பொழுது நிலையில் இல்லை |
| 145 | 5 | Ananthan (NearKannadapalayam) | 2 | **2007137** | 297 | |
| 146 | 6 | V. Vasantha (Opp. Bus Stand) | 6 | **2007141** | 91 | |
| 147 | 7 | Balasubramaniam (Opp. Bus Stand) | 7 | **2007142** | 152 | |
| | **OLD BUS STAND 3- SHOPS** | | | | **1150** | **3500.00** |
| 148 | 1 | G.Nirmala | 1 | **2007129** | 3320 | 5000 |
| 149 | 2 | B.Sudharsan | 2 | **2007130** | 3819 | 5000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 150 | 3 | V.R.P.Velmayel | 3 | **2007131** | தானியங்கி நடைபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| | **BUS STAND SHOP** | | | | **7139** | **10000.00** |
| 151 | 1 | Laser Mariappan | 1 | **2007134** | 77 | 1300 |
| 152 | 2 | C.Chandrasekaran | 2 | **2007135** | 1057 | 8700 |
| | | | | | **1134** | **10000.00** |
| | | **TOTAL** | | | **394153** | **889420.00** |

மேற்படி கடைகளுக்கு அரசாணையின படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின தலைமையிலான கண்காணிப்பு குழுவின் நடவடிக்கைகள் ந.க.எண்.3622/2017/அ2, நாள்.27.03.2018ம் தேதிய கடிதம் இணைப்பு–1ல் கலம் 9ல் குறிப்பிட்டுள்ள மாதவாடகை நிர்ணயம் செய்துத்தர அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் பட்டியலில் கலம் 7ல் கண்டுள்ளவாறு 01.4.2018 முதல் மாத வாடகை நிர்ணயம் செய்து வழங்கவும், அரசாணையில் குறிப்பிட்டுள்ள குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டும் குத்தகை உரிமத்தை புதுப்பித்து வழங்கவும், புதுப்பித்தலுக்கான கட்டணமும் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பார்வைக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :1)** 01.04.2018 முதல் கலம் 7ல் குறிப்பிட்டுள்ள மாத வாடகை தொகை நிர்ணயம் செய்து வசூலிக்கவும் மற்றும் குத்தகை புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) வரிசை எண்.144, 145, 146, 147 மற்றும் 150 ஆகிய பங்குகள் நிலையில் இல்லாததால் தவறுதலாக வரும் வரிவிதிப்புகளுக்கும் அதற்கான கேட்பு தொகைகளுக்கும், கணினி கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4662/2016/அ1)

பொருள் எண்.37

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளாலும் மற்றும் அதிக போக்குவரத்து காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIP) 2017–18 திட்டத்தின் கீழ் மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்ய ரூ.1500.00 லட்சம் மதிப்பீட்டில், 8 சிப்பங்களாக பிரித்து செயல்படுத்த, நகரமன்ற தீர்மான எண்.1954, நாள்.06.10.17ல் அனுமதி பெறப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ந.க.எண். 21422/2017/இ3, நாள்.03.10.2017 ல் வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி திட்ட மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் செயல்முறை ந.க.எண். 24545/2017/DO1, நாள்.16.11.2017 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 07.12.17ல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.2182, நாள்.19.01.2018ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, 14.02.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழான சிப்பம் எண். 2ல் வார்டு எண்.15ல் அகஸ்தியர் தெரு, காளிதாசர் தெரு, கம்பர் தெரு, சுந்தரேஸ்வரர் தெரு, வார்டுஎண். 16ல் புத்தர் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் வார்டு எண்.18ல் ராஜா அய்யர் தெரு, வார்டு எண். 18ல் வால்மிகீ தெரு முதல் நகராட்சி எல்லை வரை, கண்ணன் தெரு, வார்டு எண்.20அவ்வை நகர் பகுதியில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் வார்டு எண்.15ல் அகஸ்தியர் தெரு பகுதியில் குடிநீர் பைப்லைன் பிரதான குழாய் பதிக்கும் பணி முழுமையாக முடிவடையாமல் நிலுவையில் உள்ளதால், மேற்படி பைப்லைன் பணி முடித்த பின்பு முழு சாலையையும் மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததின் பேரில் தற்பொழுது இந்த சாலைப் பணியை செய்ய இயலாத நிலை உள்ளது. மேற்படி திட்டம் அரசு மான்யத்தில் மேற்கொள்ளப்படுவதால், பணிகள் முடிவடைந்த சாலைகளை சீரமைக்கவே திட்டநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாலும் மேற்படி திட்டப்பணியை முடித்து அரசுக்கு முடிவு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதாலும், மேற்படி பணியில் வார்டு எண்.15ல் உள்ள அகஸ்தியர் தெருவிற்கு பதிலாக வார்டு எண்.13ல் கண்ணகி தெரு உள்ள சாலைகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முழுமையாக முடிவுற்று குண்டும் குழியுமான சாலையை சீரமைக்க வேண்டிய நிலை உள்ளதால் மேலே குறிப்பிட்டுள்ள சாலைக்கு பதிலாக மேற்படி சாலையை சீரமைக்கும் பணியினை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மெசர்ஸ். அபெக்ஸ் சிவில் என்ஜினியரிங் என்ற நிறுவனத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் செய்து முடித்திட மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2622/2017/இ1)

**பொருள் எண்.38**

தாம்பரம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் வார்டு எண்.38ல் கன்னடப்பாளையம், ஜெருசலம் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய்க்கு ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணிமேற்கொள்ள ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.1873, நாள்.31.08.2017ல் நிர்வாக அனுமதி வழங்ப்பட்டுள்ளது, மேலும் இப்பணிக்கு 05.01.2018ல்

ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டத்தில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.S.நல்லதம்பி என்பவருக்கு நகரமன்ற தீர்மான எண்.2227, நாள்.31.01.2018ல் ஒப்புதல் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப் பட்டுள்ளது. மேற்படி பணியில் பணியின் பெயரானது கன்னடப்பாளையம் ஜெருசலம் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாயுடன் ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் பணி என தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை மாற்றி கன்னடப்பாளையம் தேவசகாயம் நகர் பகுதியை ஒட்டிய பிள்ளையார் கோவில் தெருவில் விடுப்பட்ட பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் தூர் வாரி தரைதளம், பக்கச் சுவர் உயர்த்தி ஆர்.சி.சி மூடியுடன் அமைக்கவும் மற்றும் குறுக்குதெருக்களின் சந்திப்புகளில் 2 சிறுபாலங்கள் அமைக்கும் பணி என திருத்தம் செய்திட வேண்டியும், மேற்படி பணிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே, மதிப்பீட்டிற்கு மிகாமலும், இப்பணிக்கு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட திரு.S.நல்லதம்பி என்பவர் மூலமே மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் பெயர் திருத்தம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3322/2017/இ1)

பொருள் எண்.39

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு பகுதியில் வார்டு எண்.3 நேரு நகர், வார்டு எண். 9ல் வனத்துறை சாலை, வார்டு எண். 38ல் பஜனை கோயில் தெரு, வார்டு எண்.37ல் உள்ள கிணற்று தெருவில் உள்ள அங்கன்வாடி மற்றும் கழிப்பிடம் ஆகிய பகுதிகளுக்கு புதிதாக 1.5 எச்.பி மின் மோட்டார் அமைத்து பேனல் போர்டு அமைத்தல், முத்துரங்கம் பூங்காவில் 30 எச்.பி ஸ்டாட்டர், 35sqm கேபிள் அமைத்தல் மற்றும் லாரி தண்ணீர் பிடிக்கும் மோட்டார் ஸ்டாட்டர் பழுது சரி செய்தல், சானடோரியம் பேருந்து நிலையத்தில் 200 AMPS பிரதான சுவிட்ச் மற்றும் 500 லிட்டர் 2 எண்ணம் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணி, முல்லை நகர் 50எம்.எம் பைப் லைன் மாற்றியமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51/2018/இ2 )

பொருள் எண்.40

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.34ல் பட்டேல் நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு 4 எண்ணம் குளுரூட்டிகள் (Air Conditioner) மற்றும் ஆரம்ப சுகாதார வளாகத்தின் முகப்பு பகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் என்ற வாசகம் பொருத்திய LED ஒளிரும் பெயர் பலகை மற்றும் மின் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.51/2018/இ1)

பொருள் எண்.41

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் JNNURM பிரதான குழாய்கள், வால்வுகள், ஸ்கவர் வால்வுகள் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி சீரமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண்.42

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.9ல் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் குடிநீர் பணிகள், மின் பணிகள் செய்தல் மற்றும் வார்டு எண்.32ல் மண்புழு உரம் தயாரிக்கும் கூடத்தில் உள்ள கிணற்றிக்கு சுவர் அமைத்து கிரில் மூடி அமைத்து வண்ணப்பூச்சு மற்றும் மின்பணிகள் செய்தல் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51 /2018/இ2)

பொருள் எண்.43

வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.8ல் சாமியார் தோட்டம், வ.ஊ.சி தெரு பகுதியில் பழுதடைந்த சின்டெக்ஸ் தொட்டிகளை மாற்றி புதியதாக இரண்டு தொட்டிகள் அமைத்தல் மற்றும் கூடுதலாக மேடையுடன் கூடிய 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல், சாமியார்

தோட்டம் 2வது தெருவில் உள்ள நகராட்சி பொது கிணற்றிக்கு சுற்றுசுவர் அமைத்து, தூர் வாரி மின்மோட்டார் பொருத்து 2000 லி கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51 /2018/இ2)

**பொருள் எண்.44**

பொது சுகாதாரம் – தாம்பரம் நகராட்சி அரசாணை எண்.77, பள்ளி கல்வி துறை நாள்.13.04.2015, அரசாணை நிலை எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.23.11.2016 மற்றும் பள்ளி கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறையின் ஆணை கடித ந.க.எண். 63550/N2/S1/2016 நாள்.15.12.2016ன் படி தாம்பரம் நகராட்சி பகுதியிலுள்ள ஆறு நகராட்சி பள்ளிகள் மற்றும் மூன்று அரசு பள்ளிகள் ஆகியவற்றின் கழிவறைகளை பராமரிப்பு செய்யும் பணி மற்றும் நகராட்சி பள்ளிகளில் காவல் பணி ஆணையர் தாம்பரம் நகராட்சி அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.3184/2013/எச்1 நாள்.28.06.2013–ன் படி திரு.S.பொன்ராஜ் என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் பள்ளி விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகள், விடைத்தாள் திருத்தம் பணி மற்றும் பள்ளி மாணவர் சேர்க்கை பணி ஆகியவற்றின் காரணமாக பள்ளிக்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் வருகை புரிவதால் பள்ளிகளின் கழிவறை மற்றும் தூய்மை பணி மேற்கொள்ள விடுமுறை நாட்களிலும் பணியாளர்களை அனுப்பி வைக்க பள்ளி தலைமையாசிரியர்/தலைமையாசிரியை ஆகியோரின் வேண்டுகோளின்படி ஏப்ரல் மற்றும் மே மாத விடுமுறை நாட்களில் தேவைக்கேற்ப பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3184/2013/எச்1)

**பொருள் எண்.45**

பொது சுகாதாரம் தாம்பரம் நகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் அகற்றும் வாகனம் TN11R4698 தகுதி சான்று பெறவேண்டி வாகனத்தின் பழுதுகளை மேற்கொள்ள தனி அலுவலரின் 26.03.2018ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 18.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| 1) | முருகன் சர்வீஸ் சென்டர்,<br>14, ராஜீவ் காந்தி நகர்,<br>தாடன்குப்பம், வில்லிவாக்கம்,<br>சென்னை–49. | ரூ.2,49,200/– |
| 2) | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ்<br>7, சாஸ்திரி நகர், R.V. நகர்,<br>சென்னை–118. | ரூ.2,45,850/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ், சென்னை என்பவர்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப் டுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அ னுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார தேவையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.806/2018/எச்1)

பொருள் எண்.46

வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் குன்று மேடு பகுதியில் உள்ள பொது கிணற்றினை தூர் வாரி ஆழப்படுத்தி பழுதுபார்த்து கிரில் மூடி அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்து பிள்ளையார் கோவில் தெரு, பஜனை கோயில் தெருக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்தல் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.51 /2018/இ2)

பொருள் எண்.47

பொது சுகாதாரம் தாம்பரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் சொந்தமான கழிவு நீர் அகற்றும் வாகனம் TN22 BX 4457 காம்பக்டர் வாகனம் தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின் சில பழுதுகளை மேற்கொள்ள தனி அலுவலரின் 26.03.2018ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 18.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| 1) | சக்திபாடி ஓர்க்ஸ்,<br>பூந்தமல்லி, சென்னை–56. | ரூ.2,49,500/– |
| 2) | ஜெயசக்தி பாடி ஓர்க்ஸ்,<br>121,122 திருவள்ளுவர் தெரு,<br>ஆவடி ரோடு,<br>பூந்தமல்லி, சென்னை –56. | ரூ.2,65,000/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளி வழங்கிய சக்திபாடி ஓர்க்ஸ், பூந்தமல்லி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னார்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார தேவையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1175/2018/எச்1)

## பொருள் எண். 48

பொது சுகாதார பிரிவு தாம்பரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN22V 9265 TATA 407 வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின் சில பழுதுகளை மேற்கொள்ள தனி அலுவலரின் 23.03.2018ம் தேதிய முன் அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளி 18.04.2018ல் கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

**பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1) | வேலு மோட்டார்ஸ் ஓர்க்ஸ், Plot No.105, 100 feet ரோடு, வேளச்சேரி,சென்னை–42. | ரூ.1,66,000/– |
| 2) | குளோபல் மோட்டார்ஸ், 220/2A, Bypass Road, பூந்தமல்லி, சென்னை 56. | ரூ.1,49,500/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளியாக குளோபல் மோட்டார்ஸ், பூந்தமல்லி என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்று அன்னார்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார தேவையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

இ) நிர்வாக முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண்.1259/2018/எச்1)

பொருள் எண். 49

பொது சுகாதார பிரிவு தாம்பரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN22 BU 8718 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தின் சில பழுதுகளை மேற்கொள்ள தனி அலுவலரின் 26.03.2018ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 18.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1) | முருகன் சர்வீஸ் சென்டர்,<br>14, ராஜீவ் காந்தி நகர், 1st Main Road,<br>தாடன்குப்பம், வில்லிவாக்கம்,<br>சென்னை–49. | ரூ.1,49,100/– |
| 2) | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ்<br>7, சாஸ்திரி நகர், R.V. நகர் (Post),<br>சென்னை–118. | ரூ.1,47,300/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ், சென்னை என்பவர்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார தேவையின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1136/2018/எச்1)

பொருள் எண். 50

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் உள்ள கணேஷ் நகர், மண்டலம் 3ல் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலைய வளாகத்தில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.70 லட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2160 நாள்.29.12.2017ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.S. சுமதி | (-) 0.01% | குறைவு |
| 2 | திரு.V.கஜேந்திர குமார் | 1.38% | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.சுமதி என்பவரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.51/2018/இ2)

பொருள் எண். 51

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.4ல் அமைந்துள்ள கடப்பேரி குளத்தில் வடக்கு மற்றும் கிழக்கு புறம் உள்ள சரிவு சுவற்றினை பலப்படுத்தி ஆர்.சி.சி சரிவு சுவர் புதியதாக அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.24.50 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 52

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.4ல் அமைந்துள்ள கடப்பேரி குளத்தில் மேற்கு மற்றும் தென்புறம் உள்ள சரிவு சுவற்றினை பலப்படுத்தி ஆர்.சி.சி சரிவு சுவர் புதியதாக அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.23.80 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 53

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.32ல் லஷ்மிபுரம் 2வது தெரு, 3வது, 4வது குறுக்கு தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 124 /2018/இ1)

பொருள் எண்.54

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் கன்னடப்பாளையம் நகராட்சி பள்ளி அருகில் இடது பக்கம் சிறுபாலம் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நகரமன்ற எண்.1899 நாள்.28.09.2017ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.03.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. T. கருணாகரன் | (–) 0.23% | குறைவு |
| 2 | திரு. T. முனுசாமி | (+) 3.35% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: -** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.T.கருணாகரன் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எண். 124/2018/இ1)

பொருள் எண்.55

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் எம்.ஜி.ஆர் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மூடியுடன் அமைத்தல் மற்றும் அமல் நகர் பகுதிக்கு வடிகால்வாய்க்கு மூடி அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 124 /2018/இ1)

பொருள் எண். 56

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.32ல் லஷ்மிபுரம் 5வது தெரு, 6வது தெரு, 7வது தெரு,10வது தெரு மற்றும் குறுக்கு தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு, நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 57

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் கன்னடப்பாளையம் குப்பை கிடங்கு சாலை மற்றும் தெற்கு புற சுற்றுசுவரை ஒட்டி அமல் நகர், காந்தி நகர் மற்றும் எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளிலிருந்து வரும் மழைநீர் வடிகால்வாய்களுக்கு பிரதான வெளியேற்றும் வடிகால்வாய் (Disposal Drain) அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 124 /2018/இ1)

பொருள் எண்.58

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் உள்ள முல்லை நகர் பூங்காவில் கூடுதலாக SS கைபிடி, மின்விளக்குகள் மற்றும் உயர்மட்ட நீர்தேக்கதொட்டி பராமரித்து வண்ணபூச்சு பணிகள் செய்தல் மற்றும் வார்டு எண்.37ல் பழைய ஸ்டேட் பாங்கு காலனி பூங்காவில் கூடுதல் மின்விளக்குகள், இருப்பு அறை, 8 வடிவ நடைமேடை மற்றும் நடைபாதை டைல்ஸ் பதித்தல் மற்றும் கூடுதலாக 3 தானியங்கி கேமிரா பொருத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதி (OSR fund) யிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண். 59

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 18ல் சேலையூர் உயர்நிலை பள்ளி, வார்டு எண். 19ல் கணேஷ் நகர் பம்பு அவுஸ், வார்டு எண். 21ல் இந்திரா நகர் பூங்கா, வார்டு எண். 22ல் ஆதி நகர் மற்றும் 23ல் ஐ.ஏ.எப் அம்பேத்கார் 2வது தெரு ஆகிய பகுதிகளில் பூங்காக்களில் உருவாகும் கழிவுகளை கொண்டு தனித்தனியாக பசுமைக் உரக்குடில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2446, நாள் 28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.04.2018ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளியில் குறைந்த ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.SRI Blue Metal என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி திட்டப்பணியில் வார்டு எண்.21 இந்திரா நகர் பகுதியில் பணியினை துவங்க சென்றபோது அப்பகுதி

மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் வார்டு எண்.20ல் ஐ.ஓ.பி காலனி தச்சு மானியம் பகுதியினை மாற்று இடமாக தேர்வு செய்யப்பட்டத்தினை மன்றத்தின் அனுமதிக்கும் மேலும் மேற்படி திட்டப்பணியினை எற்கனவே குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.SRI Blue Metal என்ற நிறுவனம் மூலமே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் செய்து முடித்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு** :– 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. வார்டு எண்.21ல் இந்திரா நகர் பதிலாக வார்டு எண்.20 ல் ஐ.ஓ.பி காலனி தச்சுமானியம் பகுதியினை மாற்று இடமாக தேர்வு செய்ததினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 718/2018/இ1)

பொருள் எண். 60

NULM திட்டத்தின் கீழ் தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சாலையோர சிறுகடை வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள இந்நகர தீர்மானம் எண். ––––நாள்.31.10.2014ன் அனுமதியினை தொடர்ந்து, 03.11.2014ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு Infomaps நிறுவனத்தினரால் சாலையோர சிறுகடை வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு சாலையோர சிறுகடை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறிருக்க சாலையோர சிறுகடை வியாபாரிகளின் சங்கத்தின் சார்பாக 96 நபர்கள் வெகு காலமாக வியாபாரம் செய்து வருவதாகவும் அவர்களின் பெயர்களை சேர்க்க கேட்டு கொண்டுள்ளதற்கு, குழு பரிந்துரைத்து கடிதம் வழங்கி உள்ள 96 நபர்களில் 78 நபர்களுக்கு மட்டும் பணியின் அவசியம் கருதி ஏற்கனவே இப்பணி மேற்கொண்டு வரும் Infomaps Sri Mangadu Kamatchiamman business Corporation நிறுவனத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு அடையாள அட்டையும் வழங்கி உள்ளனர். இப்பணி மேற்கொள்ளப் பட்டதற்கான செலவினம் ரூ.28717/– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மத்திய (ம) மாநில அரசு திட்டங்களில் மிக முக்கியமான திட்டமாதலால், அவசியம் கருதி ஏற்கனவே இப்பணி செய்து வரும் ஸ்ரீ மாங்காடு காமாட்சியம்மன் பிசினஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதித்தும், உரிய அரசு திட்ட நிதியில் மேற்குறிப்பிட்ட செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3170/2014/எப்2 ( சிஓ))

பொருள் எண். 61

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம், வார்டு எண்.25ல் காமாட்சியம்மன் கோவில் தெரு, மண்டலம் 6ஏ, வார்டு எண்.18ல் காமராஜர் தெரு சுடுகாடு மண்டலம் எண்.5ல் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலைய வளாகத்தில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சத்துக்கு நகர மன்ற தீர்மான எண்.2159 நாள்.29.12.17ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.03.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. Arunachalam Infrastructure Development | (–) 0.01% | குறைவு |
| 2 | திரு.E. ரவி | 0.56% | அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Arunachalam Infrastructure Development என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண். 62

இந்நகராட்சிப்பகுதியில் உள்ள சேலையூர் அம்பேத்கார் சுடுகாடு மண்டலம் 2 மற்றும் மண்டலம் 5 பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 லட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2161 நாள்.29.12.2017ல் அனுமதி அளிக்கப் பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. Arunachalam Infrastructure Development | (–) 0.01% | குறைவு |
| 2 | திரு.E. ரவி | 0.88% | அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Arunachalam Infrastructure

Development என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண். 63

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.20ல் அவ்வை நகர், பாளையத்தான் தெரு, திருவள்ளூர் தெரு, பூங்காதெரு ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்வாயினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண். 64

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.20ல் ஐ.ஓ.பி காலனி பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.18.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண். 65

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.24ல் வடக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்து ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 66

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் ந.க.எண். 1593/2013/ஆ1 நாள். 02.04.2018ன் கடிதத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் அலுவலகத்தில் உள்ள 10 KVA UPS System Repair / Spares/ Service செய்ததற்கான பட்டியல் தொகையில் இருந்து Frontline systems & Service (P) Ltd, Chennai -116 நிறுவனத்திறகு ரூ.7080/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:—** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1528/2018/இ1)

பொருள் எண். 67

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.1,36,38 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள கசடுகளை தூர்வாரி சுத்தம் செய்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 68

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.1,28ல் ஏரிக்கரை கலங்கல் தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நித்தியானந்தம் நகர் பகுதியில் பாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகரமன்ற எண்.2240 நாள்.31.01.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.03.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| **1** | திரு. T. முனுசாமி | (—) 0.05% | குறைவு |
| **2** | திரு. T. கருணாகரன் | (+) 0.21% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: — 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு. T. முனுசாமி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.எண். 124/2018/இ1)

பொருள் எண்.69

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.20ல் ஐ.ஓ.பி. காலனி விடுப்பட்ட பகுதிகளுக்கு பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 70

தாம்பரம் நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி 2016–17 ஆம் ஆண்டிற்கு தணிக்கை அறிக்கை, ஆண்டு கணக்குகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் என ஒவ்வொரு இனத்திற்கும் பிரதிகள் தட்டச்சு செய்து புத்தக வடிவில் தயார் செய்து வழங்க உள்ளூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரியதற்கும் மற்றும் மேற்படி பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி விரைந்து முடிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்கள் வழங்கியது.

| | | |
|---|---|---|
| 1 | ஜி சாப்ட் சிஸ்டம்<br>2/1, ஜோதிநகர் மெயின் ரோடு,<br>ஈக்காட்டுத்தாங்கல், சென்னை–32 | ரூ.48730/– |
| 2 | கர்ஸர் சொல்யூஷன்ஸ்,<br>30/4, எல்லையம்மன் கோவில் தெரு.<br>அடையாறு, சென்னை–20 | ரூ.49750/– |

அலுவலக குறிப்பு:1) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் உள்ள ஜி சாப்ட் சிஸ்டம், ஈக்காட்டுத்தாங்கல் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

2) மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு அளித்து பணி செய்து முடித்ததற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1969/2018/பி1)

பொருள் எண்.71

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கிழக்கு தாம்பரம் பகுதி வார்டு எண்.20ல் அமைந்துள்ள அம்பேத்கார் சுடுகாடு வளாகத்தில் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (Micro Compost Center) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்துக்கு நகரமன்ற எண். 2349, நாள்.28.02.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 06.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.K. கிருஷ்ணமூர்த்தி | (+) 4.89% | அதிகம் |
| 2 | திரு.R. சுராஜ் | (+) 8.75% | அதிகம் |

அலுவலக குறிப்பு: –1)மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகம் வரப்பெற்ற போதிலும் அதில் 5 சதவீதத்திற்கு மிகாமல் ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.K.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண்.718/2018/இ1)

பொருள் எண்.72

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கு தாம்பரம் பகுதி வார்டு எண்.1ல் அம்மன் நகர் பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கல் மையம் (Micro Compost Center) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்துக்கு நகரமன்ற எண்.2403, நாள்.28.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 25.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.சிம்லா கூல் மேக்கர்ஸ் | (+) 4.95% | அதிகம் |
| 2 | திரு.D. மகேஷ் | (+) 8.75% | அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகம் வரப்பெற்ற போதிலும் அதில் 5 சதவீதத்திற்கு மிகாமல் ஒப்பந்தபுள்ளி வழங்கிய மெசர்ஸ்.சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.718/2018/இ1)

பொருள் எண்.73

தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளில் தற்போது துவங்கியுள்ள கோடை காலத்தினை முன்னிட்டு, எதிர்வரும் வறட்சியினை சமாளிக்க குடிநீர் ஆதாரமான, பாலாற்று  படுகையில் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள கிணறுகளை தூர் வாருதல் உள்ளூர் நீராதாரங்களான கைம்பு ஆழ்துளை கிணறுகள், சிறுமின்விசை பம்பு ஆழ்துளை கிணறுகள் மற்றும் பொது கிணறுகளை சுத்தம் செய்தல், புதியதாக சின்டெக்ஸ் தொட்டிகள், சிறுமின்விசை பம்புகள், ஆழ்துளை கிணறுகள் அமைத்தல்,

கைபம்புகள் பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் பற்றாகுறை நிலவும் பகுதியில் தனியார் லாரிகளின் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் ஆகிய கீழ்கண்ட பணிகளுக்குண்டான மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மேலச்சேரி தலைமை நீரேற்று நிலைய பாலாறு படுகையில் 3 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல் பணி | 24.50 |
| 2 | மேலச்சேரி தலைமை நீரேற்று நிலைய பாலாறு படுகையில் ஏற்கனவே அமைந்துள்ள 10 எண்ணம் கிணறுகளை தூர் வாரி ஆழப்படுத்தும் பணி | 15.50 |
| 3 | கிழக்கு தாம்பரம் பகுதியில் குடிநீர் பற்றாகுறை ஏற்படும் 10 இடங்களில் சிறுமின்விசை பம்பு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிம் பணி | 15.00 |
| 4 | மேற்கு தாம்பரம் பகுதியில் குடிநீர் பற்றாகுறை ஏற்படும் 10 இடங்களில் சிறுமின்விசை பம்பு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் பணிம் பணி | **15.00** |
| 5 | கிழக்கு தாம்பரம் பகுதியில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் சிறுமின்விசை பம்பு ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தல் பணி | **4.50** |
| 6 | மேற்கு தாம்பரம் பகுதியில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் சிறுமின்விசை பம்பு ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தல் பணி | **4.50** |
| 7 | கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள பொதுகிணறுகளை சுத்தம் செய்து ஆழப்படுத்தி புனரமைக்கும் பணி | **10.00** |
| 8 | கிழக்கு தாம்பரம் பகுதியில் குடிநீர் பற்றாகுறை ஏற்படும் 10 இடங்களில் 1000லி கொள்ளளவு, 2000லி கொள்ளளவு, 3000லி கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டிகள் அமைக்கும் பணி | **9.00** |
| 9 | மேற்கு தாம்பரம் பகுதியில் குடிநீர் பற்றாகுறை ஏற்படும் 10 இடங்களில் 1000லி கொள்ளளவு, 2000லி கொள்ளளவு, 3000லி கொள்ளளவு கொண்ட | **9.00** |

| | | |
|---|---|---|
| | சின்டெக்ஸ் தொட்டிகள் அமைக்கும் பணி | |
| 10 | கிழக்கு தாம்பரம் பகுதியில் உள்ள கைம்பு மற்றும் ஆழ்துளை கிணறுகளை பழுது பார்த்து புனரமைக்கும் பணி | **10.00** |
| 11 | மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள கைம்பு மற்றும் ஆழ்துளை கிணறுகளை பழுது பார்த்து புனரமைக்கும் பணி | **10.00** |
| 12 | தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி | **38.00** |
| | **மொத்தம்** | **165.00** |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிகளுக்கான செலவீனத்தை வறட்சி நிவாரண நிதியினை எதிர்நோக்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.51/2018/இ2)

**பொருள் எண்.74**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு கிழக்கு தாம்பரம் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**— மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 51/2018/இ2)

**பொருள் எண்.75**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு மேற்கு தாம்பரம் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி சப்ளை செய்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:**— மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண்.76

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.18ல் சேலையூர் உயர்நிலைப்பள்ளியில், வார்டு எண்.19ல் கணேஷ் நகர் பம்பு அவுஸ் பூங்கா, வார்டு எண்.21ல் இந்திரா நகர் பூங்கா, வார்டு எண்.22ல் ஆதிநகர் பூங்கா மற்றும் வார்டு எண்.23ல் ஐ.ஏ.எப் ரோடு அம்பேத்கார் 2வது தெரு ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்களில் உருவாகும் கழிவுகளை கொண்டு தனித்தனியாக பசுமை உரக்குடில் (Onsite Compost) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2446 நாள்.28.03.2018 ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். SRI Blue Metal | (–) 0.02% | குறைவு |
| 2 | திரு.S.நல்லதம்பி | (+) 0.85% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: –1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய மெசர்ஸ்.SRI Blue Metal என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.எண்.718/2018/இ1)

பொருள் எண்.77

தாம்பரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் கணினிகள், பிரிண்டர்கள், யு.பி.எஸ் மற்றும் இணையதள கேபிள்கள் ஆண்டு பராமரிப்பு பணிக்கு 2017–18 ஆம் ஆண்டு பணிக்கு ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.1668, நாள்.31.03.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 20.04.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் மெசர்ஸ். இன்காம் சொலூசன் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தபுள்ளியினை தனி அலுவலர் முன்அனுமதி நாள். 20.04.2017 (நகரமன்ற தீர்மான எண்.1796, நாள்.31.07.2017)ல் ஒப்புதல் பெறப்பட்டு 20.04.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதின் பேரில் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி ஆண்டு பராமரிப்பு 19.04.2018 அன்று முடிவடைவதால் 01.05.2018 முதல் 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். இன்காம் சொலூசன் என்ற நிறுவனத்தின் மூலமே 2017–18 க்கான ஆண்டு விலை விகிதத்திலேயே, ரூ.2.50

இலட்சம் மதிப்பீட்டில் 31.03.2019 வரை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், 2018–19 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு கால நீட்டிப்பு உத்திரவு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப் படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். இன்காம் சொலூசன் என்ற நிறுவனத்தின் மூலமே அதே மதிப்பீடு தொகையிலும், அதே விலை விகிதத்தின் படி 2018–19ம் ஆண்டு பராமரிப்பு பணி காலத்தை காலநீட்டிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 261/2016/இ1)

**பொருள் எண்.78**

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.21ல் அமைந்துள்ள வைகை நகர் பூங்கா மற்றும் அருள் நகர் பூங்கா ஆண்டு பராமரிப்பு 2017–18 ஆம் ஆண்டு பணிக் ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி நாள். 31.03.2017 (நகரமன்ற தீர்மான எண்.1746, நாள்.31.05.2017)ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 20.04.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் திருமதி.S.சுமதி என்பவரின் குறைந்த ஒப்பந்தபுள்ளியினை தனி அலுவலர் முன்அனுமதி நாள். 20.04.2017 (நகரமன்ற தீர்மான எண்.1799, நாள். 31.07.2017)ல் ஒப்புதல் பெறப்பட்டு 20.04.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதின் பேரில் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. எனவே மேற்படி ஆண்டு பராமரிப்பு 19.04.2018 அன்று முடிவடைவதால் 01.05.2018 முதல் 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருமதி.S.சுமதி என்பவரின் மூலமே 2017–18க்கான ஆண்டு விலை விகிதத்திலேயே, ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் 31.03.2019 வரை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும். 2018–19 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு காலநீட்டிப்பு உத்திரவு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)2017–2018க்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திருமதி.S.சுமதி என்பவரின் மூலமே அதே மதிப்பீடு தொகையிலும், அதே விலை விகிதத்தின் படி 2018–19ம் ஆண்டு பராமரிப்பு பணி காலத்தை கால நீட்டிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 261/2016/இ1)

பொருள் எண்.79

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.18, 20ல் அமைந்துள்ள சேலையூர் நகராட்சி உயர் நிலைப்பள்ளி சாலையோர பூங்கா ஆண்டு பராமரிப்பு 2017–18 ஆம் ஆண்டு பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலர் முன் அனுமதி நாள்.31.03.2017 (நகரமன்ற தீர்மான எண்.1746, நாள்.31.03.2017)ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 20.04.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் திரு.D.மகேஷ் என்பவரின் குறைந்த ஒப்பந்த புள்ளியினை தனி அலுவலர் முன்அனுமதி நாள். 20.04.2017 (நகரமன்ற தீர்மான எண்.1800, நாள். 31.07.2017)ல் ஒப்புதல் பெறப்பட்டு 20.04.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதின் பேரில் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி ஆண்டு பராமரிப்பு 19.04.2018 அன்று முடிவடைவதால் 01.05.2018 முதல் 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.D.மகேஷ் என்பவரின் மூலமே 2017–18க்கான ஆண்டு விலை விகிதத்திலேயே, ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் 31.03.2019 வரை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும். 2018–19 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு கால நீட்டிப்பு உத்திரவு வழங்கி மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.D.மகேஷ் என்பவரின் மூலமே அதே மதிப்பீடு தொகையிலும், அதே விலை விகிதத்தின் படி 2018–19ம் ஆண்டு பராமரிப்பு பணி காலத்தை காலநீட்டிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 261/2016/இ1)

பொருள் எண்.80

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு தனியார் பங்களிப்பு மூலம் நவீன முறையில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்க நகராடசி நிர்வாக ஆணையர், சென்னை 05 அவர்களால் 19.01.2018ல் அறிவுரை வழங்கப்பட்டது. மேற்படி அறிவுரையின் பேரில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் தலைமையில், Waterlife India Pvt. Ltd என்ற தனியார் நிறுவனத்துடன், ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர்களுடன் 09.03.2018 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் முதற்கட்டமாக கிழக்கு தாம்பரம் வார்டு எண்.18ல் சேலையூர் நகராட்சி மேல்நிலை பள்ளியில் சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரம் பொருத்த மேற்படி நிறுவனம் மூலம் இடம் தேர்வு

செய்யப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் 30’x30’ என்ற அளவில் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் அமைக்க மெசர்ஸ்.Water Life India Pvt. Ltd.,3rd Floor Royal Demeure, Madhapur, Hyderabad 81 என்ற நிறுவனத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் ஒப்பந்தம் செய்து பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகராட்சியின் மூலம் இடம், மின் இணைப்பு மற்றும் ஆழ்துளை கிணறு மட்டுமே ஒப்படைப்பு செய்யப்படும்.
2. மின்சார கட்டணம், இடம் மற்றும் ஆழ்துளை கிணற்றினை பராமரிப்பு செலவீனம், குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் நிறுவுதல் ஆகிய செலவினங்கள் தனியார் நிறுவனத்தின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. 20லிட்டர் குடிநீர் கேன் ரூ.7/– என்ற வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் அதில் கேன் ஒன்றுக்கு ரூ.1/–க்கு நகராட்சி கருவூலத்தில் மாதம் கணக்கீட்டு செலுத்திட வேண்டும்.
4. அப்பகுதி பொதுமக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கும் பொருட்டு ஆதார் அட்டை, குடும்ப அட்டை மற்றும் எரிவாயு சிலிண்டர் இணைப்பு அட்டை ஆகிய அடையாள அட்டைகளின் பேரில் மின்னணு அட்டையின் மூலம் குடிநீர் வழங்கப்பட வேண்டும்.
5. ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.
6. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடிநீர் பரிசோதனை சான்று அளிக்கப்பட வேண்டும்.
7. பணி உத்திரவு வழங்கப்பட்டவுடன் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரை தாளில் 10 ஆண்டுகளுக்கு தொடர்ந்து பராமரித்து இயக்கவும் மேலும் 10 ஆண்டுகள் முடிந்தவுடன் சமுல நல சுத்திகரிப்பான் நிலையத்தினை நல்ல முறையில் நகராட்சி வசம் ஒப்புடைப்பு செய்திட வேண்டும் என நகராட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
8. மேற்படி குடிநீர் சுத்திகரிப்பான் நிலையம் காலை 7.00 மணிமுதல் மதியம் 12.00 வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 வரை மட்டுமே இயக்கப்பட வேண்டும்.
9. பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் புகார்கள் பதிவிட பதிவேடுகள் பராமரிப்பு செய்திட வேண்டும்.

**அலுவலக குறிப்பு:**– 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி நிபந்தனைகளின் பேரில் சமூல நல சுத்திகரிப்பான் இயந்திரம் பொருத்தி பராமரித்து குடிநீர் விநியோகம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண்.81

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் குடிநீர் கசிவை 2017–18ம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி மேற்கொள்ள ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். 1682, நாள். 31.03.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 10.05.2017 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.D .சுந்தர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி நாள்.10.05.2017ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 10.05.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 2017–18 ஆம் ஆண்டு பணி 31.03.2018 உடன் பணிக்காலம் முடிவடைகிறது. எனவே 2018–19 ஆம் ஆண்டு மேற்கு தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் குடிநீர் கசிவை 2017–18ம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் திரு.D. சுந்தர் என்பவரின் மூலமே 2017–18ஆம் ஆண்டு மதிப்பீடு தொகைக்கு, ஒப்பந்ததாரா் அளித்த அதே விலை விகிதத்திலேயே தொடர்ந்து மேற்கொள்ளவும், 2018–19 ஆம் ஆண்டு மேற்கு தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் குடிநீர் கசிவை 2018–19ம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி மேற்கொள்ளும் வகையில் 31.03.2019 வரை பணிகாலத்தை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் செலவீனத் தொகையான ரூ.15.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. குடிநீர் பணியின் முக்கியத்துவத்தினை கருதியும், நிர்வாக நலன் கருதியும் மேற்கு தாம்பரம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் குடிநீர் கசிவை 2018–19ம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணியை ஏற்கனவே 2017–18ம் ஆண்டிற்கு செய்து வரும் திரு.D.சுந்தர் என்பவரை 2017–18 ம் ஆண்டின் மதிப்பீடு தொகைக்கு பழைய விலை விகித்தலேயே 2018–19ம் ஆம் ஆண்டிற்கு பணிக்காலம் நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 386/2017/இ1)

பொருள் எண்.82

தாம்பரம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், நகர்நல மையங்கள், சேலையூர் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஜீவா வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள குளூரூட்டிகள் ஏற்படும் பழுதுகளை 2017–18 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.1671, நாள்.31.03.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 20.04.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் மெசர்ஸ்.சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தபுள்ளியினை தனி அலுவலர் முன் அனுமதி நாள். 20.04.2017 (நகரமன்ற தீர்மான எண்.1804, நாள்.31.07.2017)ல் ஒப்புதல் பெறப்பட்டு 20.04.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதின் பேரில் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி ஆண்டு பராமரிப்பு 19.04.2018 அன்று முடிவடைவதால், 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலமே 2017–18 க்கான ஆண்டு விலை விகிதத்திலேயே, ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் 01.05.2018 முதல் 31.03.2019 வரை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும். 2018–19 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு காலநீட்டிப்பு உத்திரவு வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. 2017–2018 க்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலமே அதே மதிப்பீடு தொகையிலும், அதே விலை விகிதத்தின்படி 2018–19ம் ஆண்டு பராமரிப்பு பணி காலத்தை காலநீட்டிப்பு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 386/2017/இ2)

பொருள் எண்.83

தாம்பரம் நகராட்சி சொந்தமான மேலச்சேரி தலைமை நீரேற்று நிலையத்தில் 10 எச்.பி நீர்மூழ்கி மோட்டார், ஸ்டார்ட்டர், பி.வி.சி பைப், கேபிள் புதியதாக அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள 120 எச்.பி டர்பைன் மின் மோட்டார் பழுபார்த்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.21.10 இலட்சத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண்.84

தாம்பரம் நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தானியங்கி ஏணி பொருத்தப்பட்ட TN22-AP 1189 என்ற எண்ணுள்ள ஈச்சர் வாகனத்தை 2018 ஆம் ஆண்டிற்கான தரச்சான்று பெற மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகரமன்ற எண்.2333 நாள்.28.02.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 27.04.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ்.சக்தி பாடி ஓர்க்ஸ் | 199600/– | மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | மெசர்ஸ். ஜெயசக்தி பாடி ஓர்க்ஸ் | 201650/– | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | மெசர்ஸ். ஏ.ஆர்.வி பாடி ஓர்க்ஸ் | 202700/– | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவக குறிப்பு: –1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய மெசர்ஸ். சக்தி பாடி ஓர்க்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண்.85

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் ஜி.எஸ்.டி சாலையின் ஒட்டிய அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் ஆவின் பாலகம் அமைத்திட திரு.எஸ். சிதம்பரம் என்பவருக்கு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் லிமிடேட், சென்னை 35 அவர்களின் கடித ந.க.எண்.4061/என்2/எம்.கே.ஜி/2015, நாள்.02.02.2018ல் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அதன் பேரில் அவ்விடத்தில் அமைக்கப்பட்டது. தற்போது அவ்விடத்தில் நெடுஞ்சாலை துறையின் மூலம் நகரும் படிகட்டுகள் அமைக்கப்படவுள்ளது மேலும் அவ்விடத்தின் அருகிலே தாம்பரம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் பல்நோக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்படவுள்ளது. எனவே அவ்விடத்தில் ஆவீன் பாலகம் நடத்திவரும் திரு.எஸ்.சிதம்பரம் என்பவர் தனது

வாழ்வாதாரத்திற்கு உதவிட கோரியும், அவ்விடத்திற்கு மாற்று இடம் வழங்கிட கோரி 25.04.2018ல் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் தாம்பரம் நகராட்சி வார்டு எண்.2ல் கடப்பேரி பகுதியில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலைய வளாகத்தின் பேருந்துகள் வெளியே செல்லும் பகுதியில் உயர்கோபுர மின் விளக்கு அருகாமையில் (8X5)அடி என்ற அளவில் இரும்பு பெட்டி அமைத்துக்கொள்ளவும், அதற்கான வாடகை மாதம் ரூ.1876.00/—ஐ வாடகை வரிகள் நகராட்சி சட்ட விதிகளின்படி தொடர்ச்சியாக வரிநிர்ணயம் செய்திடவும் மேலும் நகராட்சி தேவைப்படும் பட்சத்தில் இடத்தினை காலி செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் புதிய பேருந்து நிலைய உயர் மின் கோபுர மின்விளக்கு அருகில் (8X5)அடி என்ற அளவில் இரும்பு பெட்டி பங்க் அமைத்து ஆவின் பாலகம் அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**—1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலைய உயர்மின் கோபுர மின்விளக்கு அருகில் (8X5)அடி என்ற அளவில் இரும்பு பெட்டி பங்க் அமைத்திட மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் ஆவின் நிறுவனம் அரசு சார்ந்த நிறுவனம் ஆதலால் பொதுமக்களின் நலன் கருதியும் நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மாத வாடகை ரூ.1876/—ஐ நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1853/2018/அ1)

பொருள் எண்.86

இந்நகராட்சியின் 2017—18ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**— மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1842/2018/சி1)

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
தாம்பரம் நகராட்சி.